சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
புதன்கிழமை 04.09.2024 supeedsam.com supeedsam@gmail.com

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

# சுயாட்சி கோரிக்கையுடன் தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம்

## பல்லினத் தன்மை ஆட்சிக்கு பரிந்துரை

தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் அலுவலகத்தில் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நிகழ்வு இடம்பெற்றது.

தென்னிலங்கை வேட்பாளர்களை நிராகரித்து தமிழ்ப் பொதுவேட்பாளர் ஊடாக தமிழர்கள் தேர்தலை எதிர்கொள்வதற்கான அவசியம், புறநிலை, முக்கியத்துவம் என்பவற்றையும் தமிழர்கள் தேசமாக தமது நிலைப்பாட்டினை அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களில் ஆணித்தரமாக வெளிப்படுத்தும் வகையில் தமிழ் பொது வேட்பாளராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா. அரியநேந்திரன் தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பினரால் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ளார்.

03 ஆம் பக்கத்தில்...



## ரணில் ஓர் இனவாதி
# தமிழர்களை கடைசி நேரத்தில் பழி வாங்கிவிட்டார்
## சுமந்திரன் பகிரங்க குற்றச்சாட்டு



மாகாண சபைத் தேர்தல் திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற முடியாது இறுதித் தருணத்தை ில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தடுத்துள்ளதன் மூலம் அவர் ஒரு இனவாதி என்பதை நிரூபித்துள்ளதுடன், தமிழர்களை பழிவாங்கியும் விட்டார் என இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய எம்.ஏ.சுமந்திரன்,

02 ஆம் பக்கத்தில்...

## தமிழரசு கட்சியின் அத்திவாரத்திற்கே வேட்டு
### நோக்கம் என்ன என கேள்வியெழுப்பும் சிறிகாந்தா

ஒற்றையாட்சியை முன் வைத்துள்ள சஜித் பிரேமதாசவிற்கு வாக்களிக்குமாறு தமிழரசுக் கட்சி கோரியுள்ளமையானது தனது அத்திவாரத்திற்கே வேட்டு வைக்கும் செயல் என தமிழ் தேசிய கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,



02 ஆம் பக்கத்தில்...

## தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு உண்டு; ரணில்



இனம், சாதி, மதம் அன்றி, நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் குறித்து கருத்தில் கொள்ளப்படும் தேர்தலை எதிர்கொள்வதில் மகிழ்ச்சியடைவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற அண்டு Me Anything என்ற விசேட நிகழ்ச்சியில் ஜனாதிபதி கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவர் இதனைத் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

### சஜித்தை ஆதரிக்கும் தமிழரசுக் கட்சியின் முடிவு:
## பின்புலத்தில் இந்தியா?




இலங்கை தமிழரசுக் கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

என்றாலும், இந்த முடிவு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் தனிப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...

# நல்லிணக்கத்திற்கு அல்ல தமிழருக்கு பிரச்சினை இருப்பதைக் காட்டுவதற்கே பொதுவேட்பாளர்

## சங்கு சின்னத்திற்கு வாக்களிக்க கோரும் நிரோஸ்



ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்களிப்பு நாளை முதல் ஆரம்பமாகவுள்ள நிலையில் வாக்களிக்கவுள்ள அரச உத்தியோகத்தர்கள் தமிழ் மக்களின் பொதுச் சின்னமாகவுள்ள சங்கு சின்னத்திற்கு வாக்களித்து மக்கள் சார்ந்து தமக்குள்ள தேசிய உணர்வையும் பொறுப்பினையும் வெளிப்படுத்த வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை முன்னாள் தவிசாளரும் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

கோப்பாய் பகுதியில் அரச சேவையாளர்கள் மத்தியில் இடம்பெற்ற பிரசார நடவடிக்கைகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவித்த அவர்,

அரச சேவையில் எமது மக்களுக்கான பணிகளை அர்ப்பணிப்புடன் எமது சகோதரர்கள் ஆற்றி வருகின்றீர்கள். அரச சேவையில் பல்வேறுபட்ட நெருக்கடிகள் இன ரீதியிலும் அரசியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டும் இன்றும் காணப்படுகின்றன. அரச சேவையாளர்கள் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இன ரீதியில் பழிவாங்கப்பட்டுள்ளீர்கள்.

தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டமை நாட்டின் இன முரண்பாடுகளுக்கு பிரதான அடிப்படைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது என்றால் அச் சட்டத்தின் காரணமான மிகவும் பாதிக்கப்பட்ட தரப்பினுள் அரச சேவையாளர்கள் உள்ளடங்கினீர்கள்.

பல்கலைக்கழக தரப்படுத்தல், அரச சேவையில் சிங்களமயப்படுத்தல், அரச சேவையினை இராணுவ மயப்படுத்தல், அரசியல்கட்சி மயப்படுத்தல் என குறிப்பாக வடக்குக் கிழக்கில் பணியாற்றும் நீங்கள் இன ரீதியாக மாறி மாறி ஆட்சிக்குவந்த அரசாங்கங்களால் பாதிக்கப்பட்டீர்கள்.

தற்போது அவை நேரடியாகப் தெரியக்கூடியதாக பிரயோகிக்கப்படவில்லை ஆயினும் மறைமுகமாக இன ரீதியிலான புறந்தள்ளல்கள் இலங்கையின் நிர்வாக சேவைக் கட்டமைப்பு, இதர சேவைக்கட்டமைப்புக்களில் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இவ்விடயங்கள் எல்லாம் தமிழ் மக்களுக்கு எமது அரசியல் அபிலாசைகளைப் பிரயோகிக்கத்தக்க நிரந்தர அரசியல் தீர்வு கிட்டும் வரையில் தொடர்கதையாகக் காணப்படும் என்பதுவே உண்மை. இந் நிலையில் எமக்கும் பிரச்சினைகள் உண்டு என்பதை இரகசியமாக வாக்களித்து ஒடுக்குமுறையை வெளிப்படுத்துங்கள்.

தமிழ் பொதுவேட்பாளர் என்பது நாட்டினுள் இன நல்லிணக்கத்தினைத் துண்டாடுவதற்கானதல்ல.

மாறாக எங்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை வெளிக்காட்டுவதற்கானது.

இது ஜனநாயக ரீதியில் சர்வதேசம் ஏற்றுக்கொண்ட உரிமைசார் நடவடிக்கையுமாகும் என்பதை புரிந்து கொண்டு அரச உத்தியோகத்தர்கள்தமிழ் மக்களின் பொதுச் சின்னமான சங்குச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தமிழரசு கட்சியிலிருந்து சுமந்திரன் துரத்தப்படுவார்

இலங்கை தமிழரசு கட்சிக்குள் சுமந்திரன் எப்படி தெரியாமல் வந்தாரோ, அதே போலவே அவர் தெரியாமலேயே துரத்தப்படுவார் என முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை உறுப்பினருமான சண்முகம் ஜீவராஜ் தெரிவித்துள்ளார்.

தமிழரசு கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக மேற்கொண்ட தீர்மானத்திற்கு அதிருப்தி வெளியிடும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், தமிழரசுக் கட்சியின் தலைவர், புதிதாக தெரிவான தலைவர் உள்ளிட்ட பலர் இல்லாத கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விகாரைகள் அமைக்க அதிக நிதி ஒதுக்கிய சஜித்துக்கு சுமந்திரன் ஆதரவளித்ததன் காரணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி, திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்ட தமிழரசுக் கட்சிக் கிளைகள் பொது வேட்பாளரை ஆதரிப்பது என தீர்மானித்துள்ள நிலையில், நேற்றைய தினம் மேற்கொண்ட தீர்மானம் கவலைக்குரியது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையிலேயே 2010ம் ஆண்டு எவ்வாறு சுமந்திரன் கட்சிக்குள் தெரியாமல் வந்தாரோ, அதேபோல அவர் தெரியாமலேயே துரத்தப்படுவார் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சஜித்தை ஆதரிக்கும் தமிழரசுக் கட்சியின் முடிவு...

**தீர்மானத்தில் எடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதுடன், அக் கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான சிவஞானம் சீறிதரன், இத்தீர்மானத்துக்கு** எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் இந்த தீர்மானத்தின் பின்னால் இந்தியா இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென தடுமாற்றத்தில் இருந்த தமிழரசுக் கட்சி, அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலையும் சந்தித்திருந்தது. இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது பொறுத்தமாக இருக்குமென்பதை அஜித் தோவல் மறைமுகமாக தெளிவுப்படுத்தியுள்ளார். இதன் பின்னரே சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி எடுத்தது.

ஆனால், இத்தீர்மானம் குறித்து கட்சியில் பல்வேறு மாறுபட்ட நிலைப்பாடுகள் தொடர்ந்து நிலவி வருகிறது. குறிப்பாக தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதே பொறுத்தமாக அமையும் என சீறிதரன் உள்ளிட்ட சிலர் கூறிவருகின்றனர்.

என்றாலும், இத்தேர்தலில் தமிழர்கள் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளதால் தமிழரசுக் கட்சியின் முடிவு சாணக்கியமானது என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

பல்வேறு கருத்து மாறுபாடுகளுக்கு மத்தியில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுக்க இந்தியாவின் அழுத்தம் கடுமையாக இருந்துள்ளதுடன், சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுக்கும் சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிராத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கிய தலைவர்களுக்கு இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இருந்து சில அழைப்புகள் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

## தமிழரசு கட்சியின் அத்திவாரத்திற்கே வேட்டு....

**தமிழினத்தின் சுதந்திரத்தையும், சுயநிர்ணய உரிமை வேண்டும் என்ற கோரிக்கையுடன் தமிழ் தேசிய கட்டமைப்பாக நாம் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அரியநேத்திரனை** களமிறக்கியுள்ளோம்.

தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களான ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுர குமார திஸநாயக்க மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகிய நால்வரும் ஒற்றையாட்சி சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு அதன் வழி நடப்பவர்கள்.

சஜித் பிரேமதாச ஒற்றையாட்சிக்கு வெளியே சென்று தீர்வு காணுவதாக மூச்சு கூட விடவில்லை. 13ஆம் திருத்தத்தை பற்றி பேசி இருக்கிறார். புதிய அரசியல் யாப்பை ஏற்படுத்தும் வரையில் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாக கூறியுள்ளார்.

ஆனால் இணைப்பாட்சி பற்றியோ ஒற்றையாட்சி பற்றியோ எங்கேயும் குறிப்பிடவில்லை.

இந்த நிலையில் தான் தமிழரசு கட்சியினர் அவசரமாகக் கூடி சஜித் பிரேமதாசாவிற்கு வாக்களிப்போம் என கூறியுள்ளனர்.

இதன் மூலம் தமிழரசு கட்சி தமிழ் மக்களுக்கு எதனை சொல்லுகிறார்கள் என்பதனை தான் நாங்கள் கேட்கிறோம்.

இதுவரை காலமும் ஒற்றையாட்சிக்குள் இருந்து எம்மை விடுவிக்க வேண்டும் என நாம் தொடர்ந்து அரசியல் ரீதியாக போராடி வரும் நிலையில், ஒற்றையாட்சியின் வழி நடக்கும் சஜித் பிரேமதசாவை ஆதரித்துள்ளார்கள். இவர்களின் நோக்கம் என்ன ?

ஆகவே மக்கள் தமிழரசு கட்சியின் நோக்கத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு உண்டு; ரணில்

**மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,**

**“தற்போது, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சீன எக்சிம் வங்கி மற்றும் 17 நாடுகளுடன் கடன் நிலைத்தன்மை, கடன் நிவாரணம் மற்றும் 2032 வரையிலான முன்னோக்கி செல்லும் வழிகள் குறித்து உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடன் உடன்பாட்டை எட்டியுள்ளோம்.**

**இந்தப் பாதையில் தொடர்ந்து செல்லப் போகிறோமா அல்லது மாற்றப் போகிறோமா என்பதுதான் இப்போதைய கேள்வி. அரசாங்கத்தின் வருவாய் மற்றும் செலவினங்களின் தற்போதைய அளவுகோல்களை மாற்ற முடியாது. வரித் திருத்தங்கள் செய்யப்படலாம் என்றாலும், அதற்கு முழு அளவுகோல்களைப் பூர்த்தி செய்ய வேண்டும்.**

**மாற்று வருமான வழிகளை முன்வைக்காமல் வரிகளைக் குறைத்து, அரச வருவாயைக் குறைத்து, நலன்புரி நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கச் செலவினங்களை அதிகரிக்க ஏனைய கட்சிகள் பரிந்துரைக்கின்றன.**

**2019 ஆம் ஆண்டில் வரி குறைப்பு மற்றும் அதிகப்படியான சலுகைகள் காரணமாக வருமானம் குறைந்தது. இதனாலேயே 2022 இல் பொருளாதார சிக்கல்கள் எழுந்தன. கடந்த காலத்தில் செய்த தவறுகளை மீண்டும் செய்ய வேண்டுமா என்று வினவ விரும்புகிறோம்.**

**எனவே, நாம் இப்போது ஒரு முடிவை எடுக்க வேண்டும். கொள்கை விவரங்களைப் பற்றி நான் பேசப் போவதில்லை. அடுத்த ஆண்டு வரை சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து 3 பில்லியன் டொலர்களைப் பெற இருக்கிறோம். 2040-2042 வரை கடன் திருப்பிச் செலுத்துவதற்கான அவகாசத்துடன் கூடிய ஒப்பந்தமும் உள்ளது. அதை இழக்க நாம் தயாரா? நம் நாட்டிற்கு நடைமுறைச் சாத்தியமற்ற மாற்றம் தேவையில்லை.**

**இந்த நெருக்கடியை சமாளித்து, 2042இற்குள் ஸ்திரத்தன்மையை அடைய முடியும். ஆனால் நாம் விரைவில் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாறவில்லை என்றால், 2035-2040இல் நாம் தொடர்ந்து கடன் வாங்கும்போது மற்றொரு நெருக்கடி ஏற்படலாம்.**

**எவ்வாறாயினும், போட்டித்தன்மை வாய்ந்த ஏற்றுமதி சார்ந்த, டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரமாக மாறுவதன் மூலம், தன்னிறைவான பொருளாதார மாற்றத்தை நோக்கி நாம் செல்ல முடியும். எங்களிடம் நிலம் போன்ற கணிசமான சொத்துக்கள் உள்ளன. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில், உலக மக்கள் தொகை சுமார் 2 பில்லியன்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

**இந்த சந்தைக்குத் தேவையான உணவளிக்க நமது விவசாயத்தை நவீனப்படுத்த வேண்டும். இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 2.5 மில்லியனில் இருந்து 5 மில்லியனாக உயர்த்த வேண்டும்.**

**சுகாதாரம், கல்வி மற்றும் சமூக நலன்புரி ஆகிய துறைகளில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் இதை 10% ஆக குறைக்க நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். தோட்டத்தில் தற்போதுள்ள பாரம்பரிய விவசாயத்திற்கு பதிலாக விவசாய வணிகங்களை உருவாக்கவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.**

**தற்போது லயன்அறைகளில் வசிப்பவர்களுக்கு நில உரிமை வழங்கவுள்ளோம். ஊழியர்களின் சேமலாபநிதி மற்றும் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் பணத்தை, பத்திரங்கள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக, அதற்கான முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராய்கின்றோம். தொழிற்சங்கங்களையும் முதலாளிகளிகளையும் இந்த செயல்பாட்டில் இணைக்க எதிர்பார்க்கிறோம்.**

**பெரும்பான்மையான மக்கள் தொகையில் குறைவான பிரதிநிதித்துவம் கொண்ட பெண்களின் நலனுக்காக பல விடயங்களை மேற்கொள்ள வேண்டும். அடுத்த சில ஆண்டுகளில் அரசு மற்றும் தனியார் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளோம்.**

**சாதி, இனம் போன்று நீடித்து காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஆணைக்குழுவொன்று தொடர்பிலும் கவனம் செலுத்தியிருக்கிறோம். இனம், சாதி, மதம் வேறுபாடின்றி அனைவரையும் பாதித்த பொருளாதார நெருக்கடிகள் குறித்து கருத்தில் கொள்ளப்படும் தேர்தல் நடைமுறை காண கிடைத்துள்ளதையிட்டு ஜனாதிபதி என்ற வகையில் நான் பெருமையடைகிறேன்.**

**இந்த சூழ்நிலை ஒரு நாடாக ஒன்றிணைவதற்கும், தற்போதுள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வாய்ப்பளிக்கும். குழந்தை பராமரிப்பு மற்றும் குடும்ப வன்முறை போன்ற பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டியுள்ளது. ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவு இருந்தாலும், அதற்குள் மேலும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.**

**அதேபோல் நமது அரசியல் முறையிலும் மாற்றம் தேவைப்படுகிறது. பொருளாதாரச் சரிவு அரசியல் முறையினையும் பாதித்துள்ளது. மற்றைய கட்சிகள் பழைய பொருளாதார கொள்கைகள் மீதே தங்கியுள்ளன. அது இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் முயற்சியாகும். அவ்வாறான செயற்பாடுகளை நம்பியிருக்க முடியாது.**

**அரசியல் கட்சிகள் எடுக்கும் தீர்மானங்களை நீதிமன்றம் வரையில் கொண்டு செல்லும் கலாச்சாரத்திற்கு மாறாக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரே சட்ட வரையறைக்குள் செயற்படும் வகையில் ஜேர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் செயற்படுத்தப்படும் நடைமுறையை உருவாக்க வேண்டும்.**

**ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளையும் எடுப்பது அவசியம். சிலர் ஊழல் மோசடி தொடர்பான 400 கோப்புகள் பற்றி பேசுகின்றனர். அவற்றில் 15 பேர் மட்டுமே சட்ட நடவடிக்கை எடுக்க கூடியவையாகும். எனவே, பேசிக்கொண்டிருப்பதை விடுத்து அதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம்.**

**நாம் ஆட்சிக்கு வந்த பிறகு அதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை கோரினோம். ஊழல் தடுப்புச் சட்டம், குற்றச் செயல்கள் தொடர்பான சட்டம் போன்ற புதிய சட்டங்களை உள்ளடக்கிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்.**

**பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். அதற்காக, இங்கிலாந்தைப் போல பாராளுமன்றத் தரநிலை சட்டத்தில் திருத்தங்களை செய்ய எதிர்பார்க்கிறோம். அதனால் பொருளாதாரத்தை போன்றே அரசியல், சமூக கட்டமைப்புக்களும் மாற்றத்துக்கு உள்ளாக வேண்டும்.**

**இந்த விரிவான மாற்றம் இளையோருக்கு ஒளிமயமான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்கும். 1991இல் வியட்நாம் தொழில் அமைச்சருடன் வெளிநாட்டு முதலீடுகள் குறித்து உரையாடியது நினைவிற்கு வருகிறது. நாம் விரைவில் மாற்றத்தை எட்டாத பட்சத்தில் மீண்டும் அவரிடம் பேசி ஆலோசனை கேட்க வேண்டிய நிலைமை உருவாகும். எனவே செப்டம்பர் 21ஆம் திகதி இந்த விடயங்களை நினைவில் கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.**

## ரணில் ஓர் இனவாதி தமிழர்களை கடைசி நேரத்தில்...

என்னால் தனிநபர் பிரேரணையாக சமர்ப்பிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பான இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

குறித்த திருத்தச்சட்டமூலம் இன்றைய தினம் மூன்றாம் வாசிப்புக்காக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

ஜனாதிபதிக்கு அழைத்த போது, மூன்றாம் வாசிப்புக்காக இந்த திருத்தச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் சபாநாயகருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்துவதாகவும் கூறினார்.

ஆனால், இலங்கை தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வேறு வேட்பாளர் ஒருவரை ஆதரிக்க தீர்மானம் எடுத்தமையால் இதனை இன்றைய நிகழ்சி நிரலில் உள்வாங்காது தடுத்துள்ளனர்.

ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்காமைமால் தமிழர்களை பழிவாங்கியுள்ள ரணில். ரணில் விக்ரமசிங்க தமது காலத்தை முடிக்கும் தருணத்தில் ரணில் ராஜபக்ச என்று நிரூபித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க இனவாதியாக தமிழ் மக்கள் முன்பும் இந்த நாட்டு மக்கள் முன்பும் காட்டப்படுவார்.

தமிழ் மக்களுக்கு எதிராக அவர் செய்யும் இந்த விடயம் இனவாதியாக காட்டிக் கொள்ளவே. தமிழ் மக்களுக்கு பல வாக்குறுதிகளை அவர் கொடுத்துள்ளார். ஆனால், எதனையும் அவர் செய்யவில்லை.

கடைசி நேரத்தில் எம் மக்கள் மீது வெறுப்பை காட்டும் செயல்பாடாகவே இதனை பார்க்கிறோம். என்றார்.

# சுயாட்சி கோரிக்கையுடன் தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம்

**இந்நிலையில் , பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்றைய தினம் வெளியிடப்பட்டுள்ளது.**

பொது வேட்பாளரின் முழுமையான தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ்த் தேசிய இனமானது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக விடுதலைக்காகப் பல்வேறு வழிமுறைகளில் போராடி வருகிறது.

இப்போராட்டத்தின் ஒரு வழிமுறையாகத், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு ஆகிய நாம் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தியுள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பா. அரியநேத்திரன் அவர்கள் சங்குச் சின்னத்தின் கீழ் தமிழ்ப்பொது வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு என்பது , தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பாகும்.

தமிழீழ விடுதலை இயக்கம் , தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆகிய ஏழு கட்சிகளும் தமிழர்தாயகத்தைச் சேர்ந்த அரசியற் செயற்பாட்டாளர்கள், கருத்துருவாக்கிகள், புத்திஜீவிகள், சிவில் சமூகங்கள், அரசசார்பற்ற அமைப்புகள், தொழிற்சங்கங்கள், கிராமமட்ட அமைப்புகள்;, தொழில்சார் அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள், மாணவ அமைப்புகள் இணைந்து உருவாக்கிய மக்கள் அமைப்பாகிய தமிழ்மக்கள் பொதுச்சபையும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பே தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பு ஆகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உள்ள மிகச்சிறு பகுதியினர் தவிர ஏனைய அனைவரும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறார்கள்.







தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு எனப்படும் இந்தக் கூட்டணி கடந்த 15 ஆண்டுகளில், உருவாக்கப்பட்ட கூட்டணிகளில் ஒப்பீட்டளவில் பெரிய அணியாகும்.

இது தமிழ் ஒற்றுமையின் புதிய நம்பிக்கையாகவும் எதிர்காலத் தமிழ் அரசியலுக்கான பலமான அடித்தளமாகவும் எழுச்சி பெறும்.

ஈழத் தமிழர்களாகிய நாம் இலங்கைத் தீவில் தனித்துவம் மிக்க ஒரு தேசிய இனமாகவும், தேசமாகவும் வாழ்ந்து வருகிறோம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட, மரபு வழித் தாயகத்தைக் கொண்ட, தனித்துவமிக்க பண்பாட்டைக் கொண்ட ஒரு தேசம் ஆவோம் இலங்கைத் தீவு பல்லின, பலமத, பல மொழி, பல் கலாசாரத்தைக் கொண்ட ஒரு தீவாகும். இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ள மறுத்ததன் விளைவே இனப்பிரச்சினை தோற்றம் பெறுவதற்கும் கூர்மை அடைவதற்கும் இறுதியில் விஸ்வரூபம் எடுப்பதற்குமான மூல காரணமாகும். தமிழ் மக்களுடைய தேசிய இருப்பை அழிக்கும் செயற்பாடுகளே இன அழிப்பாகும்.

தமிழர் தேசத்தின் இருப்பையும் தனித்துவத்தையும் அழித்து பெரும்பான்மை இனத்துடன் அதனைக் கரைக்கும் உள்நோக்கத்தோடு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது திட்டமிட்டு முன்னெடுத்த இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் முதலில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் போராடினார்கள்.

அப்போராட்டங்களை நிர்மூலமாக்கும் குறிக்கோளோடு ஏவி விடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் மிகக் கொடிய விளைவே இறுதிப் போரில் நிகழ்ந்த உச்சமான இன அழிப்பாகும்.

இந்தப் பின்னணியில் உலகின் மிகப்பெரிய தமிழ் சட்டமன்றமாகிய தமிழக சட்டமன்றம் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கெதிராக இடம் பெற்றது.

இன அழிப்பு என்று ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றியது. வடமாகாண சபை அதை இன அழிப்பு என்று ஏகமனதான ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது.

கனடாவில் பிரம்டன் நகர சபை அதை இன அழிப்பென்று ஏகமனதான ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது. கனேடிய நாடாளுமன்றம் மே பதினெட்டினைத் தமிழ் இனப்படுகொலை நினைவுகூரல் நாளாக ஏகமனதாக ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியது.

பிரான்சில் உள்ள நான்கு மாநகர சபைகளான ஆணிஞடிஞ்ணுது,Sevran,Choisy&Le&Roi,Vitry&Sur&Seine என்பன அது இனஅழிப்பு என்று தீர்மானமாக நிறைவேற்றின. ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதிகள் சட்டசபையில்(இணிணஞ்ணுஞுண்ண்) இந்த ஆண்டு மே15 அறிமுகப்படுத்தப்பட்ட 1230 தீர்மானமானது ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் நடத்தப்பட்டது இனஅழிப்பு என்பதை ஏற்றுக்கொள்கின்றது.

ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைக் காணும் பொருட்டு சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அவர்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கு ஒரு பொது வாக்கெடுப்பு அவசியம் என்பதை அத்தீர்மானம் வலியுறுத்துகின்றது.

எனினும், இன்றுவரை இன அழிப்புக்கு பரிகார நீதியும் கிடைக்கவில்லை; இன அழிப்புச் செயற்பாடுகள் நிறுத்தப்படவுமில்லை. மாறாக,

1-திருகோணமலையில் தமிழர் மரபுரிமைச் சின்னங்கள் இருந்த இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால்; ஆக்கிரமிக்கப்பட்டு அவ்விடங்கள் வேகமாக சிங்கள பௌத்த மயமாக்கப்படுகின்றன.

மேலும், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவில் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு 26க்கும் அதிகமான விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சில பாரம்பரிய தமிழ்க் கிராமங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பல நீதிமன்றத் தீர்ப்புகளை மீறுபவை. இனஅழிப்பு நடவடிக்கைகளால் அதிகம் விழுங்கப்பட்ட ஒரு மாவட்டம் இது.

2-மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு புறம் சிங்கள பௌத்த மயமாக்கல் நடந்து வருகிறது. இன்னொரு புறம் நிலப்பறிப்பு தொடர்கிறது. உதாரணமாக 3000 குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான கால்நடை சார்ந்த பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தோடு மயிலத்தமடு, மாதவனை போன்ற இடங்களில் மேய்ச்சல் தரைகளை அரச அனுசரணையோடும் பாதுகாப்போடும் சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள். இங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன.

வாகரை. கதிரவெளியில் கனிமவள அகழ்வு மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்றது. வாகரையில் இறால் பண்ணைகள் மக்களுடைய எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விரண்டு விடயங்களும் மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிப்பவை. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு எதிரானவை.

4-அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை முழுமையான ஒரு பிரதேச செயலர் பிரிவாகத் தரம் உயர்த்துமாறு தமிழ்மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இன்றுவரை ஆட்சிக்கு வந்த எந்த ஓர் அரசாங்கமும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. இனஅழிப்பு நடவடிக்கைகளால் அதிகம் விழுங்கப்பட்ட மற்றொரு மாவட்டம் இது.

5-வடக்கில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் குருந்தூர் மலை, வெடுக்கு நாறிமலை, நீராவியடி ஆகிய இடங்களில் தமிழ் மரபுரிமைச் சின்னங்கள் அமைந்திருக்கும் சிறுமலைகளில் அரச திணைக்களங்களும் பிக்குகளும் அரச படையினரும் பௌத்த கட்டுமானங்களை உருவாக்கி வருகிறார்கள்.

அங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன. இக்கட்டளைகளை வழங்கிய ஒரு நீதிபதி நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அதற்காக வெட்கப்படவேண்டிய அரசாங்கம் அவரைத் தனிப்பட்ட முறையில் சிறுமைப்படுத்தியது.

முல்லைத்தீவில் உள்ள கொக்குத்தொடுவாயில் மேற்கொள்ளப்படும் மனிதப் புதைகுழி அகழ்வானது பன்னாட்டு நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறவில்லை.

யுத்தம் முடிவடைந்த பின்னர் முல்லைத்தீவில் மட்டும் 67 பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் பொதுமக்கள் மற்றும் இராணுவம் இடையிலான விகிதம் 2:1 ஆக இன்னமும் இருக்கின்றது. சுமார் 100க்கும் மேற்பட்ட படையினர் முகாம்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன.

6-வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான் குளம் என்ற தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் குடியிருப்பு இராணுவப் பாதுகாப்புடனும் அரச அனுசரணையுடனும் ஆக்கிரமிக்கப்பட்டு ?கலாபோபஸ்வேவ? என்ற பெயருடைய சிங்களக் கிராமமாக மாற்றப்பட்டு மிகக்குறுகிய காலத்துக்குள் அந்த கிராமத்துக்குத் தேவையான சகல உட்கட்டுமான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, அம்பாந்தோட்டையிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களை அரசின் அனுசரணையோடு குடியமர்த்தி ?நாமல்கம? என்ற ஒரு கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

7-மன்னார் மாவட்டத்தில், கனிம வளம் பறிக்கப்படுகின்றது. அங்குள்ள முள்ளிக்குளம் கிராமத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் ஸ்ரீலங்கா கடற்படையானது அக்கிராமத்தின் பூர்வ குடிகளான தமிழ் மக்களை அங்கு முழுமையாக மீளக் குடியமர விடாமல் தடுத்து வருகின்றது.

மன்னார் புதைகுழி தொடர்பான உண்மைகள் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

8-கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழர் மரபுரிமைச் சொத்துக்களை தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்து வருகின்றது.

9-யாழ்ப்பாண மாவட்டத்தில் படைத்தரப்பு முகாம்களை அமைத்திருக்கும் பெரும்பாலான காணிகள் தனியாருக்குரியவை. இவற்றுள் மிகச்சிறிய நிலப்பரப்புத்தான் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்திலும் தமிழர் மரபுரிமைச் சொத்துக்கள் பல ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள பௌத்த மயமாக்கப்பட்டுள்ளன.

நாவற்குழியில் அரசின் அனுசரணையோடு ஒரு சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக ஒரு புதிய விகாரை படையினரால் கட்டப்பட்டுவிட்டது.

10-தமிழர் தாயகம் எங்கும் தனியார் காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே அபகரிக்கப்பட்ட தனியார் காணிகள் பல இதுவரை விடுவிக்கப்படவில்லை. ஆனால் பெரும்பகுதி விடுவிக்கப்பட்டு விட்டதாக அரச புள்ளி விபரங்கள் பொய் கூறுகின்றன.

தமிழர் தாயகமெங்கும் வனவளத் திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும் காடுகளின் பாதுகாப்பு, வனஉயிரினங்களின் பாதுகாப்பு என்ற பெயரில் தனியார் காணிகள், பயிர்ச்செய்கை நிலங்கள், வணக்கத்தலங்கள் உள்ளடங்கிய பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவு நிலத்தை அபகரித்து வைத்திருக்கின்றன.

மேற்குறிப்பிடப்பட்டவை சில உதாரணங்கள் மட்டுமே. கடந்த 15 ஆண்டுகளாக நிலப்பறிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் அரசுக் கொள்கையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

11-புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்கள் 15 ஆண்டுகளின் பின்னரும் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களின் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள்.

12-தமிழ் மக்களின் அரசுக்கு எதிரான செயற்பாடுகளைப் பயங்கரவாதமாகச் சித்திரிக்கக்கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்தும் தமிழ் மக்களின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது



# சுயாட்சி கோரிக்கையுடன் தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம்

13-அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. மாறாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவது முழுமையாக நிறுத்தப்படவும் இல்லை.

14-மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள்;, அரசியற் செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறைகளும் அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன.

15-வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வருகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கான சர்வதேச தினமாகிய கடந்த ஓகஸ்ட் முப்பதாம் திகதியன்று திருகோணமலையில் நடந்த எதிர்ப்பு பேரணியில் கலந்து கொண்ட உறவினர்கள் மற்றும் அரசியற் செயற்பாட்டாளார்கள் மீது அரச பயங்கரவாதமானது போலீஸ் நடவடிக்கை என்ற வடிவத்தில் ஏவி விடப்பட்டது. நீதிமன்ற கட்டளையின் கீழான இச்சட்ட நடவடிக்கை மூலம் அப்பேரணி குலைக்கப்பட்டது.

இவ்வாறு கட்டமைக்கப்பட்ட இன அழிப்புச் செயற்பாடுகள் தமிழர் தாயகமெங்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழர்களின் தாயகத்தின் நிலத் தொடர்ச்சியைத் துண்டாடுவது, இன விகிதாசாரத்தைக் குறைப்பது, நிலத்தைப் பறிப்பது, தமிழ் மரபுரிமைச் சின்னங்களை அழிப்பது, அங்கே சிங்கள பௌத்த மரபுரிமைச் சின்னங்களை ஸ்தாபிப்பது போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வெவ்வேறு வடிவங்களே.

இந்த நடவடிக்கைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாத தன்மையைக் கொண்டவை. ஸ்ரீலங்கா அரசு என்ற மையத்திலிருந்து உள்நோக்கத்துடன் திட்டமிடப்படுகின்றவை.

தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் ஆக்கிரமிப்பைப் பகலில் சட்டரீதியாகச் செய்கின்றன.

பிக்குகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்கள் சட்டத்தையோ நீதிமன்றத்தையோ காவல்துறையையோ மதிப்பதில்லை. படையினர் இரவுகளில் பௌத்த கட்டுமானங்களை இரகசியமாகக் நிர்மாணிக்கின்றார்கள்.

நிலப்பறிப்பு, சிங்களபௌத்தமயமாக்கல், அரசின் அனுசரணையுடனான குடியேற்ற நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் படைத்தரப்பு ஒரு சமாந்தரமான அரசைப்போல செயற்படுகின்றது.

அதில் வடக்கு கிழக்கில் மட்டும் 65,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இனவழிப்புச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அதேவேளை நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைதான் உண்டு என்று பொய்யான தோற்றத்தைக் கட்டியெழுப்பி பன்னாட்டு சமூகத்தை நம்ப வைக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண மறுத்து இன அழிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்த காரணத்தாலேயே நாடு கடனாளியாகியது. எனவே, இப்பொழுது நாட்டை பிடித்துலுப்பும் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் யுத்தத்திற்காகப் வாங்கிய கடன் சுமைதான்.

இப்பொழுது தென்னிலங்கையில் வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ள அனைவரும் பொருளாதார நெருக்கடி எனப்படுவது இனப்பிரச்சினையின் விளைவுதான் என்பதனை மறைக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கமுடியாது என்ற ஆழமான உண்மையை எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

அவர்களுடைய பரப்புரையின் குவிமையமாக இருப்பது நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து எப்படி மீட்டெடுப்பது என்பதுதான். இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காகத் தமிழ் மக்களால் ஏற்கத்தக்க பொருத்தமான முன்மொழிவு எதனையும் அவர்களில் யாரும் இதுவரை முன்வைக்கவில்லை.

யுத்த தளபாடங்களுக்காக முன்பிருந்த அரசாங்கங்கள் 25000 கோடி அமெரிக்க டொலர்களைச் செலவழித்துள்ளதாக இந்திய பாதுகாப்புத்துறை சார்ந்த ஒரு நிபுணரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தைச் செலவழித்து முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட உயிரழிவு, பொருள் அழிவைக் குறித்து இதுவரையிலும்




உத்தியோகபூர்வ மதிப்பீடு எதுவும் இலங்கை அரசாங்கத்தால் செய்யப்பட்டிருக்கவில்லை.

அந்த அழிவுகளில் இருந்து தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்கான எந்த ஒரு சிறப்பு செயல் திட்டமும் இன்றுவரையிலும் உருவாக்கப்படவுமில்லை.

யுத்தத்துக்காகப் படையினரின் ஆட்தொகை பல இலட்சமாக அதிகரிக்கப்பட்டது. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 40 விகிதம் படையினருக்கே செலவழிக்கப்படுகிறது.

இலங்கைத்தீவின் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மொத்தச் சம்பளத்தில் ஏறக்குறையச் சரிபாதி படையினருக்கான சம்பளமாக வழங்கப்படுகிறது.

கடந்த 15 ஆண்டுகளிலும் படைத்தரப்பின் ஆட்தொகை குறிப்பாக வடக்கு கிழக்கில் குறைக்கப்படவில்லை. அதாவது இராணுவமய நீக்கம் நிகழவில்லை.

மாறாக, தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த மயப்படுத்தும் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்காகவே படைத்தரப்பு பெருஞ் செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான இராணுவ பொருளாதாரச் சூழலுக்குள் புலம் பெயர்ந்த தமிழர்கள் முதலீடு செய்யத் தலைப்பட்டமாடடார்கள். அண்மைக் காலங்களில் அதிகரித்த அளவில் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வருகிறார்கள்.

தற்போது புலம்பெயர்பவர்கள் படித்தவர்கள், சமூகத்தில் பொறுப்பான பதவிகளை வகித்தவர்களே இப்படிப்பட்ட தலைமை தாங்கும் தகைமையுள்ள படித்தவர்கள் சமூகத்தில் இருந்து வெளியேறுவது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் அரசியலில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறான இராணுவப் பொருளாதார சூழலுக்குள் தமிழ் மக்கள் மத்தியில் கூட்டுணர்வையும் நம்பிக்கையையும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம். அதேசமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வின் அவசியத்தையும் அவசரத்தையும் தென்னிலங்கைக்கும் உலக சமூகத்துக்கும் நிராகரிக்கப்பட முடியாத விதத்தில் உணர்த்த வேண்டியதும் அவசியம்.

தமிழ் மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள்தான் உண்டு என்று தொடர்ச்சியாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் கூறிவரும் ஒரு பின்னணியில் இனப் பிரச்சினையைப் பேசுபொருளாக்கி அதன்மீது தென்னிலங்கையின் கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கும் நோக்கத்தோடு, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினராகிய நாம் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளராக திரு.பாஅரியநேத்திரன் அவர்களை முன் நிறுத்துகிறோம்.

கடந்த 46 ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களித்து வந்திருக்கிறார்கள்;. 2009க்குப் பின் 3 ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ்மக்கள் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். இவர்களில் வென்றவர்களும் சரி தோற்றவர்களும் சரி இன்றுவரையிலும் இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வைத் தரவும் இல்லை; இன அழிப்புச் செயற்பாடுகளை நிறுத்தவும் இல்லை.

கடந்த 46 ஆண்டுகளாக ஜனாதிபதித் தேர்தல்களில் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு பதில் வினையாற்றும் அணுகுமுறையில் இருந்து வேறுபட்டு இந்த முறை தமிழ்மக்கள் செயல்முனைப்போடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது என்று எடுக்கப்பட்ட முடிவின் விளைவே தமிழ்ப் பொது வேட்பாளர் ஆகும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ் மக்களை ஓரணியாகத் திரட்டுவார். அதேசமயம், இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கித் தமிழ் மக்களின் கூட்டு விருப்பத்தை உலக சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் வெளிப்படுத்துவார். இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியையும் கோருவார்.

இந்த அடிப்படையில், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது இனப் பிரச்சனைக்கான நிரந்தர தீர்வானது பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று உறுதியாக வலியுறுத்துகின்றது.

1-இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு உருவாக்க வேண்டிய இலங்கைத்தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2-தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான் இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தலாம். எனவே புதிய யாப்பு ஆனது இலங்கைத் தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில் தேசங்களின் ஒன்றிணைவாக அமைய வேண்டும். அதாவது புதிய யாப்பானது இலங்கைத் தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் (Plurinational State) கட்டமைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

3-ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த ஒரு அரசியல் தீர்வாலும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது.

4-இந்த விடயத்தில் தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதனை தாமே நிர்ணயிப்பதற்குப் பொருத்தமான பன்னாட்டு ஏற்பாடுகளைக் கோருவதற்கு உரித்துடையவர்கள்.

5-தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த தற்போதைய வடக்கு கிழக்கு மாகாணங்களை எல்லையாகக் கொண்டு அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகிற்குள் முஸ்லீம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சுவார்த்தை நடாத்த தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புத் தயாராக உள்ளது.

6-மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும். மேலும் உடனடி பிரச்சினைகளுக்கு அவர்கள் தொடர்ச்சியாகக் கோரிவரும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும். இத்தீர்வுகளுக்கான போராட்டத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

7-ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக்கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகள் மீள நிகழாமையை உறுதி செய்ய வேண்டும்.

இதுவரையிலுமான ஐநா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக ஐநா பொதுச் செயலர் பொறுப்புகூறலை ஐநா பொதுச்சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும்.

8-அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பைத் தடுக்கவும் நமது வளங்கள் இன அழிப்பின் ஒரு பகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும்.

இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர் தேசத்துக்கு இருக்க வேண்டும்.

9-ஒரு நிரந்தரத் தீர்வைக் கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும், தமிழர் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென்று பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின்கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ் மக்கள் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று உலகுக்கும் தென்னிலங்கைக்கும் வெளிக்காட்ட பொதுக் கட்டமைப்பின் பொது வேட்பாளராகிய திரு.பா.அரியநேத்திரன் அவர்களுடைய சங்குச்சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வருவதற்காக முன் நிறுத்தப்படவில்லை. அவர் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், கட்சிகளை ஒன்றிணைப்பதற்காகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருமித்த குரலில் ஒலிக்கச் செய்வதற்காகவுமே முன் நிறுத்தப்படுகிறார்.

ஒன்று திரண்ட தமிழ் மக்கள் உலகத்தின் முன்னும் தென்னிலங்கையின் முன்னும் பலமாக நிமிர்ந்து நிற்பார்கள். அதாவது அரியநேத்திரன் அவர்களுக்கு வழங்கப்படும் வாக்குகள் தமிழ் மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும் வாக்குகள்தான்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களைக் கௌரவிக்கும் வாக்குகள்தான். எனவே தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தமிழ் மக்களின் தேசியக் கடமையாகும்.

சங்குச் சின்னத்துக்கு ஆகக்கூடிய தமிழ் வாக்குகளை வழங்குவதன் மூலம் அன்பான தமிழ் மக்களே எங்களை நாங்களே வெற்றி பெற வைப்போம்.





# விபுலானந்த மணி மண்டபத்தில் களைகட்டிய கர்நாடக இசைக்கச்சேரி





( வி.ரி. சகாதேவராஜா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவையொட்டி நடத்திய கர்நாடக இசைக் கச்சேரி அனைவரையும் பரவசத்தில் ஆழ்த்தியது .

முன்னதாக கலைஞர்கள் சுவாமி விபுலானந்த அடிகளாரின் இல்லத்தில் விசேட பூஜை செய்து அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக இசைத் துறை

சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீவிக்ரமகீர்த்தி திருமதி கிருபாஞ்சனா கேதீஸ் கலந்து சிறப்பித்தார் .

இந்தியாவில் இசைத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்ற அழகரெத்தினம் கல்யாண்சரண்( வாய்ப்பாட்டு ),சுதாகரன் கோவிசரண்( மிருதங்கம் ) ,பிரிசில்லா ஜோர்ஜ் ( வயலின்) ஆகியோர் இந்த கர்நாடக இசைக்கச்சேரியை ஒன்றரை மணி நேரம் முதல் தடவையாக சிறப்பாக நடத்தினர்.

நிகழ்வில் விபுலானந்த பணி மன்ற தலைவர் சோ.சுரநுதன் தலைமையுரையாற்ற செயலாளர் கு.ஜெயராஜி அறிமுக உரையாற்றினார். கர்நாடக இசைக் கச்சேரி தொடர்பான நயவுரையை பணி மன்றத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்தினார் .

இசைக் கச்சேரி நடாத்திய மூன்று கலைஞர்களுக்கும் விபுலானந்த பணி மன்றத்தினர் பொன்னாடை போர்த்தி விபுலனின் திருவுருவப்படம் பொறித்த நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

## சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மாநாடு




(ஏறாவூர் நிருபர்)

சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மாநாடு நேற்று மட்டக்களப்பு கொம்மாதுறையிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் 03.09.2024 நடைபெற்றது.

சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர் சிறி மேகநாதன் தலைமையில் சர்வமத ஆசியுடன் இம்மாநாடு ஆரம்பமானது.

அமைப்பின் தலைவர் கீர்த்தி சிறி கலாநிதி ரீ. கப்பில ரன்ஜன் பெணான்டோ விமானப் படையின் மட்டக்களப்பு ஸ்கொட்ரன் லீடர் ஏரீ. செல்லர் சட்டத்தரணிகள் பொலிஸ் உயரதிகாரிகள் அமைப்பின் களுத்தறை மாவட்ட வடமேல்; மாகாண ஊவா மாகாண வடமத்திய மாகாண பணிப்பாளர்கள் பௌத்த இந்து இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சமய தலைவர்கள் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் மாதர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மனித உரிமைகள் அமைப்பின் திருகோணமலை அம்பாறை மட்டக்களப்பு கிளைகளின் பிரதிநிதிகள் தொண்டர் அமைப்புக்களின் பிரிதிநிதிகள் உள்ளிட்ட பலர் இம்மாநாட்டில் பிரசன்னமாயிருந்தனர்.

மனித உரிமைகள் தொடர்பில் சமூகத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து இம்மாநாட்டில் சமூகத்தலைவர்கள் கருத்துத்தெரிவித்தனர். இவ்வாறான பிரச்சினைகளுக்கு சட்டரீதியிலான வழிகாட்டல்கள் மற்றும் தீர்வுகள் வழங்குவதற்கு ஏதுவாகவே மாவட்டங்கள் தோறும் அலுவலகங்கள் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் செயற்பாடுகளுக்கு பல்வேறு வழிகளில் ஒத்தாசைகளையும் ஆலோசனைகளையும் வழங்கிவரும் கிராம சேவையாளர்கள் பொலிஸ் அதிகாரிகள் கல்விமான்கள் மதத்தலைவர்கள் உள்ளிட்ட 35 பேர் இதன் போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் ஊடக செயற்பாடுகள் மூலமாக ஒத்துழைப்பினை நல்கிவரும் பிராந்திய சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏறாவூர் எம்ஜிஏ. நாஸர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கழிவு முகாமைத்துவம் தொடர்பில் விழிர்ப்புணர்வு



தலவாக்கலை பி.கேதீஸ்

கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பெருந்தோட்ட மக்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நுவரெலியா பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் நிகழ்ச்சி ஒன்று தலவாக்கலை, லிந்துலை, மட்டுக்கலை தோட்டங்களில் இடம் பெற்றது. இதில் பொலித்தீன், பிளாஸ்டிக் மற்றும் ஏனைய கழிவுகளை சேதமடையாத வகையில் முறையாக முகாமைத்துவம் செய்வது குறித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு விளக்கமளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுற்றுச்சூழலில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை இடுவதால் சுற்றுச்சூழலில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இது தொடர்பாக மக்களுக்கு விழிர்ப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தலவாக்கலை - லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி துரைராஜா ரெய்ஷினி தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றதுடன், தலவாக்கலை தோட்டக் கம்பனி, லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் நுவரெலியா பிரதேச சபையின் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத ஆலய வருடாந்த மகோற்சவம்..!

(அ . அச்சுதன்)



கிழக்கிலங்கையின் சின்னக்கதிர்காமம் என கூறப்படுகின்றதும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என முறையாக அமையப்பெற்றதுமான வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத ஆலய வருடாந்த மகோற்சவம் 04-09-2024 புதன்கிழமை காலை 10.35 மணி தொடக்கம் 11.45 மணிக்கு இடையில் கொடியேற்றம் இடம் பெறும்.

தொடர்ந்து 14 (பதினான்கு) தினங்கள் திருவிழாக்கள் நடைபெற்று 18-09-2024 புதன்கிழமை காலை தீமிதிப்பும் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

விசேடமாக 05 ஆம் நாள் திருவிழா மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகி விசேட பைரவர் பூசையும் ஆறுமுக சுவாமி வீதி வலம் வருதல் இடம் பெறும், 09 ஆம் நாள் திருவிழா அன்று கதிர்காமசுவாமி எழுந்தருளி வீதி வலம் வருதலும், 12 ஆம் நாள் மாம்பழத்திருவிழாவும், 15 ஆம் நாள் வேட்டைத் திருவிழாவும் இடம் பெறும்.

விழாக்காலங்களில் அடியார்களின் நன்மை கருதி திருகோணமலை, மட்டக்களப்பு , கல்முனை, மூதூர், ஆகிய பகுதிகளிலிருந்து விசேட போக்குவரத்து பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன, ஆலயத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும்.

## சம்பூர் அரசடி விநாயகர் நாகம்பாள் ஆலயத்தில் சமய நிகழ்வுகள்





(அ . அச்சுதன்)

சம்பூர் அரசடி விநாயகர் நாகம்பாள் ஆலய முன்றலில் ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்ற பேராசிரியர் Dr.வே.சங்கர நாராயணன் ( சேலம் தமிழ் நாடு ) அவர்களுடைய ஆன்மீக சொற்பொழிவின் போது ஆலய பரிபாலன சபையினால் அவர் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இந் நிகழ்வில் அறம் செய்ய விரும்பு அமைப்பினால் மாணவர்களுக்கு சமய தேவார புத்தகங்களும், அகில இலங்கை இந்துமா மன்றத்திநாலும் அப்பியாசக் கொப்பிகளும் மற்றும் நந்திக்கொடிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந் நிகழ்வை ஒழுங்குபடுத்திய திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையினருக்கும்,இந்துமா மன்றத்திற்கும் மற்றும் சிலம்பம் மாணவர்கள் அனைவருக்கும் ஆலய பரிபாலனசபையினரின் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்தனர்.

# ஐக்கிய மக்கள் சக்தி , யாழ்ப்பாணத்திற்குள் நுழையக்கூட போராடுகிறது

இலங்கை ஏனைய நாடுகளிடம் இருந்து கடன் பெறுவதை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய சகாப்தத்தை உருவாக்க, அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 73வது ஆண்டு பூர்த்தி நிகழ்வில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடன் பெற்றுக்கொள்வதை நிறுத்த வேண்டிய நேரம் இது. ஏனைய நாடுகளில், இலங்கை தங்கியிருப்பதை நிறுத்த வேண்டிய நேரம் இதுவாகும். இலங்கையர்கள் தாமாகவே தேசத்தைக் கொண்டு நடத்தும் வகையிலான நிதியை உழைக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.



நாட்டின் நலனுக்காக அரசியல் கட்சிகள் ஒன்றிணைய முடியும் என்பதை தற்போதைய அரசாங்கம் நிரூபித்துள்ளதாகவும், அதன் விளைவாக புதிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தி வாக்குகளை திருடுவதில் ஈடுபட்டுள்ளது என்று கூறிய அவர், தேசிய மக்கள் சக்தி அதன் வரலாற்றுடன் தொடர்பை இழந்துவிட்டதாகவும், அவர்களின் கடந்த காலத்தை ஒப்புக்கொள்ளாமல் முன்னேறுவது அவர்களுக்கு கடினமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவை நாட்டுக்கு என்ன பங்களித்தன? தமிழ் கட்சிகளின் வாக்குகளை திருட முயன்று பிடிபட்ட ஐக்கிய மக்கள் சக்தி இப்போது யாழ்ப்பாணத்திற்குள் நுழையக்கூட போராடுகிறது. அரசியல் கட்சிகள் இதுபோன்ற குழப்பங்களை தவிர்க்க வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி முன்னுதாரணமான அரசாட்சியாகத் திகழும்!

பொது மக்களுக்கு சுமையை ஏற்படுத்தாத, முன்னுதாரணமான அரசாட்சி ஒன்று கட்டியெழுப்பப்படுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் மிஹிந்தலை பிரகடனம் வெளியீட்டு வைபவம் மிஹிந்தலை ரஜமஹாவிஹாராதிபதி உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மகா சங்கரத்தினருக்கு மத்தியில் மிஹிந்தலை நகரில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நான் அதிகாரத்திற்கு வந்த பிறகு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை தன்னிச்சையாக பயன்படுத்தப் போவதில்லை. இது பதவி அல்ல. மக்களின் சேவகனாக நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவேன்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்த விதத்திலும் மக்களுக்கு சுமையாக இருக்காது. ஒரு முன்னுதாரணமான அரசாட்சி ஒன்று நடத்தப்படும். மக்கள் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு முன்னர் தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.



தசராஜ தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு முன்மாதிரியான பணிவான செவிசாய்க்கக்கூடிய அரசாட்சி ஒன்று எமது நாட்டுக்குத் தேவை. அதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# நாட்டில் சிறந்த அரசியலுக்கான தேவை நிலவுகின்றது!



நாட்டில் சிறந்த அரசியலுக்கான தேவை நிலவுவதாக தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பதுளை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அனுரகுமார திஸாநாயக்க இதனை தெரிவித்தார்.

இதன்போது தற்போது நிலவும் அரசியல் அமைப்பை மக்கள் நிராகரித்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நன்றி- ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க

நாட்டுக்காக அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பதை தற்போதைய அரசாங்கம் நிரூபித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு இம்பீரியல் ஹோட்டலில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 73 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது கடந்த காலத்தில் நாட்டை அபிவிருத்தி செய்ய இரண்டு, கட்சிகளும் அர்ப்பணித்துள்ளன. எங்களுக்குள் வேறுபாடுகளும் இருந்தன.

அதனால் நன்மை தீமை என்ற இரண்டுமே கிட்டியது. கடந்த 75 வருடங்களில் என்ன செய்தோம் என்று இன்று சிலர் கேட்கின்றனர். நாங்கள் என்ன சொன்னோம், செய்தோம் என்ற பட்டியல் எங்களிடம் உள்ளது.

அதைப் பற்றி பிறகு சொல்கிறேன். அன்றைய அரசாங்கங்கள் இந்த நாட்டில் சுகாதாரம் மற்றும் கல்வியை மேம்படுத்தின. நல்லதை போன்றே அவதூறுகளையும் ஏற்றுக்கொண்டோம். சில கட்சியினரை போன்று நாங்கள் வரலாறுகளை மறப்பதில்லை.

எமது வரலாறு ஒரு இடத்திலும் வெறுமையானதாகவும் காணப்படவில்லை. நாங்கள் வெவ்வேறு நிலைப்பாடுகளை கொண்டிருந்தோம். ஆனால் நாங்கள் எப்போதும் நாட்டைப் பற்றியே சிந்தித்தோம்.

2022இல் நாட்டைப் பற்றியே சிந்தித்து செயற்பட்டோம். பாரம்பரிய அரசியல் தலைவர்கள் இருக்கவில்லை. ஒருபுறம் பிரதமராவிருந்த மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினார். அதன் பிறகு என்ன நடந்தது? எதிர்க்கட்சித் தலைவரைப் போன்று அனுர திஸாநாயக்கவும் பிரதமர் பதவியை ஏற்கவில்லை.

இருவரும் ஓடிவிட்டார்கள். ஆனால் நாங்கள் ஒன்றுபட்டு ஆட்சி அமைத்தோம். நாட்டுக்காக அரசியல் கட்சிகளாக ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பதை காண்பித்துள்ளோம். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த நாங்கள் இங்கு வந்துள்ளோம்.

நாட்டை அபிவிருத்தி செய்ய விரும்புகிறோம். இன்று எரிவாயு, எரிபொருள் மற்றும் மருந்துகளுக்கு வரிசைகள் இல்லை. ஆனால் நான் உருவாக்கிய ஒரே வரிசை

செப்டம்பர்21ஆம் திகதி வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லப்போகும்

வரிசை மட்டும்தான்.

இந்தப் பயணத்தின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

அப்போது நாங்கள் அரசியல் ரீதியாக எதிர்தரப்பினராக இருந்தாலும், எங்களுக்குள் ஒற்றுமை இருந்தது.

சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் சகலரையும் நாம் அறிவோம். சுதந்திர கட்சி வழங்கிய ஆதரவை நான் என்றும் மறக்க மாட்டேன் இவ்வாறு ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# நான் ராஜபக்சவின் புதிய தலைமுறை: நவீன இலங்கையை விரும்பும் நாமல்

நானோ அல்லது எனது தந்தையோ ஏதேனும் குற்றவாளியாக இருந்தால், நாங்கள் தேர்தலில் மக்களை எதிர்கொள்ள மாட்டோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

முன்னிணி ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தீவிரமான, குழப்பமான கடந்த காலங்களுடன் வந்தவர்கள். ஆனால் அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் ஏதும் இல்லாத ஒரே வேட்பாளர் தான் மட்டுமே. கடந்த காலங்களில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து தனது சிறிய தந்தை கோட்டபாய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விலக நேரிட்டது.

இந்நிலையில், தனக்கு எதிராகவும் திட்டமிட்ட சதித்திட்டம் இருப்பதாக நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



நான் பயப்படவில்லை, ஏனென்றால் நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை. நாங்கள் தவறு செய்திருந்தால், நான் போட்டியிட மாட்டேன்.

நானோ அல்லது எனது தந்தையோ ஏதேனும் குற்றவாளியாக இருந்தால், நாங்கள் தேர்தலில் மக்களை எதிர்கொள்ள மாட்டோம்.

நான் ராஜபக்சவின் புதிய தலைமுறை என்றும், நாட்டை உயர்ந்த நிலைக்கு கொண்டுச் செல்ல நவீன மற்றும் புதிய சிந்தனையை வழங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

என் சிந்தனை நவீனமானது. நவீன இலங்கைக்கு செல்ல வேண்டுமானால் நவீன சிந்தனையை நாம் கொண்டிருக்க வேண்டும்.

உள்கட்டமைப்பு மற்றும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துதல், சேவைகள் மற்றும் சுற்றுலாத்துறைக்கான உலகளாவிய மையமாக இலங்கையை மாற்றுவதே எனது கவனம்.

நான் அதை மிகவும் நேர்மறையான அணுகுமுறையுடன் பார்க்கிறேன் என மேலும் தெரிவித்துள்ளார்.

# முதல் வாக்கு பொது வேட்பாளருக்கு 2 வது வாக்கு சஜித்துக்கு

நீங்கள் விரும்பியது போன்று தமிழ் பொது வேட்பாளருக்கு உங்களுடைய முதலாவது வாக்கை செலுத்தி இரண்டாவது வாக்கை சஜித் பிரேமதாசவிற்கு செலுத்துமாறு எம்.பி.யான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட குழுவினர் கூறியதாக யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.



பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் எம்.பி. தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் வணிகர் கழக பிரதிநிதிகளை நேற்று திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம், ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன, பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, , யாழ்ப்பாண வணிகர் கழக உறுப்பினர்கள்கலந்து கொண்டிருந்தனர்.

நடைபெற இருக்கின்ற ஜனாதிபதி தேர்தலில் யாழ்ப்பாணம் வணிகர்கழகம் தமிழ் பொது வேட்பாளருக்கு ஏன் ஆதரவு வழங்கியுள்ளது என்பது தொடர்பாக வருகைதந்தவர்களுக்கு தெளிவுபடுத்தியதாக யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.

அதற்கு பதில் வழங்கிய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நீங்கள் விரும்பியது போன்று தமிழ் பொது வேட்பாளருக்கு உங்களுடைய முதலாவது வாக்கை செலுத்தி இரண்டாவது வாக்கை சஜித் பிரேமதாசவிற்கு செலுத்துங்கள் என்று கூறியதாக இ.ஜெயசேகரம் மேலும் தெரிவித்தார்.



# பங்களாதேச சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள்: ஆட்சிக் கவிழ்ப்பில் பாகிஸ்தான் உளவமைப்பு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இன்னும் முழுமையான அமைதி திரும்பாத நிலையில், வங்கதேச விடுதலையை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டிருந்த சிலைகள் பல சிதைத்து அழிக்கப்பட்டுள்ளன.

### இந்தியாவுக்கு எதிரான மனநிலை:

இந்தியாவுக்கு எதிரான மனநிலை கொண்ட அமைப்பே இந்த சிலைகளை சேதப்படுத்தியதாக இந்திய காங்கிரஸ் கட்சியும் குற்றஞ்சாட்டியுள்ளது. வங்கதேசத்தில் இட ஒதுக்கீட்டிற்கு எதிராகத் தொடங்கிய இந்தப் போராட்டம் மெல்ல வன்முறையாக மாறியது. திடீரென கிளம்பிய மாணவர் போராட்டம் அந்நாட்டு அரசியலையே மொத்தமாகப் புரட்டிப் போட்டது.

இறுதியில் பாரிய வன்முறை அரசின் கையைவிட்டுச் சென்ற நிலையில், வேறு வழியின்றி அந்நாட்டின் பிரதமராக இருந்த ஹசீனா தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார்.

ஆயினும் அங்கு வன்முறை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. தொடர்ந்து ஆங்காங்கே தாக்குதல்கள் நடந்தே வருகிறது. இதற்கிடையே வங்கதேச விடுதலையை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டிருந்த சிலைகள் பல அழிக்கப்பட்டுள்ளன.

முக்கியமாக 1971இல் நடந்த வங்கதேச விடுதலை போருக்குப் பிறகு பாகிஸ்தான் சரணடைந்த தருணத்தைக் குறிப்பிடும் வகையிலான சிலையை வங்கதேசத்தில் உள்ள யாரோ மர்ம ஆசாமிகள் சிலர் உடைத்து அழித்துள்ளனர்.

1971 ஷாஹீத் நினைவு வளாகத்தில் உள்ள இதுபோன்ற சிலைகள் பல இந்திய- விரோத ஆசாமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியக் கலாச்சார மையம், கோவில்கள் மற்றும் இந்துக்களின் வீடுகளின் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல் நடந்து வரும் நிலையில், இப்போது இந்த சிலையைச் சிதைத்துள்ளனர்.

### இந்துக்கள் மீது தாக்குதல்:

சிறுபான்மை இந்துக்களின் வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் அங்கே முஸ்லீம் மக்களே இறங்கியிருப்பதாகத் தகவல்கள் வந்தாலும் இதுபோன்ற சம்பவங்களும் தொடர்கின்றது.

1971ல் நடந்த விடுதலைப்போர் வங்கதேசத்தை விடுவித்தது மட்டுமின்றி பாகிஸ்தானுக்கும் அது மிகப் பெரிய அடியாகவே இருந்தது. பாகிஸ்தான் ராணுவ மேஜர் ஜெனரல் அமீர் அப்துல்லா கான் நியாசி, இந்திய ராணுவம் மற்றும் வங்கதேசத்தின் முக்தி பாஹினியிடம் சரணடையும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதையே அந்த சிலை சித்தரித்தது. அப்போது இந்தியாவின் கிழக்கு படைத் தளபதியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் ஜக்ஜித் சிங் அரோராவிடம் பாகிஸ்தான் ராணுவம் சரணடைந்து இருந்தது.

பாகிஸ்தான் மேஜர் மேஜர் ஜெனரல் நியாசி தனது 93,000 வீரர்களுடன் சரணடைந்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஒரே நேரத்தில் இத்தனை வீரர்கள் சரணடைந்தது அதுவே முதல்முறையாகும். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சிலையைத் தான் இப்போது மர்ம ஆசாமிகள் சேதப்படுத்தி உள்ளனர். இந்த சிலையை ஏன் சம்பந்தமே இல்லாமல் சேதப்படுத்தியுள்ளனர் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

### பாக்கிஸ்தான் உளவு ஊடுறுவல்:

அங்குள்ள பாக். ஆதவாளர்கள் இந்த வன்முறையை நடத்தி இருக்கலாம் என்றும் , ஆட்சிக் கவிழ்ப்பில் பாக்கிஸ்தான் உளவமைப்பின் ஊடுறுவல் உள்ளது எனவும் கூறப்படுகிறது.

வங்கதேச முன்னாள் பிரதமர் பதவியை ஷேக் ஹசீனா ராஜினாமா செய்துவிட்டு இந்தியா வந்துவிட்டார். ஹசீனாவுடன் சேர்ந்து பல முக்கிய அதிகாரிகளும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர். இருந்தாலும் வங்கதேசத்தில் இன்னும் முழுமையாக அமைதி திரும்பவில்லை. அங்கு முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு வன்முறையைக் கட்டுக்குள் கொண்டு வரத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

இருப்பினும் அங்கு சிறுபான்மையினராக இருக்கும் இந்து குடும்பங்கள், கோயில்கள் மற்றும் இந்துக்கள் நடத்தும் வணிக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தே வருகிறது. வங்கதேச இந்துக்கள் எப்போதும் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்கே ஆதரவாக இருந்துள்ளனர். இதன் காரணமாகவே இந்தத் தாக்குதல்கள் நடப்பதாகக் கூறப்படுகிறது.

### அகதிகளாக இந்துக்கள்:

பங்களாதேஷின் 170 மில்லியன் மக்கள் தொகையில் 8 சதவீதமாக இருக்கும் இந்து மக்கள் தற்போது தொடர் வன்முறைக்கு உள்ளாகியுள்ளனர்.

முன்னாள் பிரதமர் ஹசீனா பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதில் இருந்து பல இந்துக்கள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தியாவின் மேற்கு வங்கம், திரிபுரா, அசாம், மிசோரம், மணிப்பூர் ஆகிய மாநிலங்கள் பங்களாதேஷ் எல்லையில் அமைந்துள்ளன. இந்த மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான பங்களாதேஷ் இந்துக்கள் அகதிகளாக குவிந்து வருகின்றனர்.

முன்பு பங்களாதேஷில் 32 சதவீதமாக இருந்த இந்துக்களின் மக்கள் தொகை தற்போது 8 சதவீதமாக குறைந்திருக்கிறது.

### தொடரும் தாக்குதல்கள்:

கடந்த வாரத்தில், பல இந்துக்களின் வீடுகள், வணிக நிறுவனங்கள், கிட்டத்தட்ட 20 கோயில்கள் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் அல்லது எரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஆட்சி மாற்றத்திற்கு பிறகு, சிறுபான்மை சமூகங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு எதிராக அந்நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான இந்துக்கள் நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் வீதிகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறுபான்மையின இந்துக்கள் மீது 52 மாவட்டங்களில் 205 தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளதாக இந்து அமைப்புகள் தெரிவித்துள்ளன.

தலைநகர் டாக்கா உட்பட பல்வேறு இடங்களில் வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வன்முறையில் இருந்து தப்பிக்க ஆயிரக்கணக்கான இந்துக்கள் அயல் நாடான இந்தியாவுக்குள் நுழையவும் முயன்று வருகின்றனர்.

### இந்திய அரசு தலையிட வேண்டுதல்:

தொடரும் வன்முறையின் விளைவாக, ஆயிரக்கணக்கான பங்களாதேஷ் இந்துக்கள் இந்தியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்தின் தலைவரான முஹம்மது யூனுஸ், இந்தத் தாக்குதல்கள் கொடூரமானது என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களுக்கு இடைக்கால அரசு கண்டனம், தெரிவித்துள்ளதுடன் ''அவர்கள் இந்த நாட்டு மக்கள் இல்லையா? நாட்டைக் காப்பாற்ற முடிந்த உங்களால் சில குடும்பங்களைக் காப்பாற்ற முடியவில்லையா?'' என்று முஹம்மது யூனுஸ் போராட்டக்காரர்களை நோக்கி கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் அனைத்து இந்து, கிறிஸ்தவ மற்றும் பௌத்த குடும்பங்களையும் பாதிப்பிலிருந்து பாதுகாக்குமாறு மாணவர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை பங்களாதேஷில் இந்துக்களுக்கு எதிரான தாக்குதலை, இந்திய அரசு தலையிட்டு இந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என இந்தியாவில் உள்ள இந்து அமைப்புக்கள் கோரியுள்ளன.

பங்களாதேஷ் நாட்டின் வளர்ச்சிக்கு பலவிதங்களிலும் இந்தியா துணை நின்று வருகிறது. பங்களாதேஷ் நாட்டில் நடப்பது இட ஒதுக்கீடு காரணமாக ஏற்பட்ட கலவரம் என முதலில் செய்திகள் தெரிவித்தாலும், அதன் பிறகு நடக்கும் சம்பவங்களை பார்க்கும் போது அதன் பின்புலம் வேறுமாதிரி இருக்கிறது. இந்துக்கள் மீது தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

---

# காலம் திறமான ஆசான் வரலாற்றுப் பாடங்களைக் கற்பதற்கும் கற்றுக்கோடுப்பதற்கும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உள்ள சிலருக்கு,

வடக்குக் கிழக்கில் உள்ள மக்கள் எல்லாரும் தங்கட சட்டைப் பைக்குள்தான் இருக்கிறார்கள் எனும் மமதை தலைக்கேறி விட்டது.

வீட்டுச்சின்னம் இல்லாவிட்டால் யாரையும் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்ற அறிவிலித் தனம் மேலோங்கி இருக்கிறது.

01. வெளிச்சவீடு, உதயசூரியன் சின்னத்தினை வெவ்வேறான காலத்தில் தமிழ் மக்கள் ஏற்றிருக்கிறார்கள்.

02. வடக்கு கிழக்கு மாகாணத்திலே தற்போதுள்ள நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் அதிகளவான வாக்குகளைப் பெற்றவர்கள் வீட்டுச்சின்னத்தில் போட்டியிட்டவர்கள் அல்ல.

03.

கிழக்கில்,
பிள்ளையான்
வியாழேந்திரன்
வடக்கில்,
அங்கயன் இராமநாதன்
டக்ளஸ் தேவானந்தா
திலீபன்
கஜேந்திரகுமார்
கஜேந்திரன்
விக்கினேஸ்வரன்

ஆகிய 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வீட்டுச் சின்னத்தில் உறுப்பினர்களாகியவர்கள் இல்லை.

இவற்றை ஆய்வு செய்து பார்த்து, மக்களின் கருத்துகளை ஆய்வு செய்துபார்த்து தமிழரசுக் கட்சியினர் இனி வரும் காலங்களில் முடிவுகளை எடுக்க முற்பட வேண்டும்.

இல்லையெனில் தமிழ் மக்கள் கட்சியைக் காணாமல் ஆக்கி விடுவார்கள்.

திருக்கோணமலை மாவட்டத்தில் மேனாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்துகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவானது ( சங்குச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்) வரலாற்று முக்கியத்துவமான தீர்க்கமான தீர்மானமாகும்.

இத்தீர்மானம் வரலாற்றில் நின்று நிலைக்கும்.

இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருக்கோணமலை மாவட்டத் தலைவரும் திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திரு சண்முகம் குகதாசன் அவர்களது பெயர் நின்று நிலைக்கும்.

அவ்வாறான உயர்ந்த தீர்மானம் கட்சியின் மத்திய குழுவினரால் மிதிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான விலையினை இலங்கைத் தமிழரசுக் கட்சி மக்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கும்.

'காலம் சிறந்த ஆசான்.
காத்திருங்கள் பாடம் படிப்பதற்கு'

ஒரு நேரத்தில் ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் தலைமைக்கும் மக்கள் அவர்கள் புரியும் மொழியில் திறமாகப் பதிலளிப்பார்கள்.

அவசரமின்றிக் காத்திருங்கள், வரலாற்றுப் பாடங்களைப் படிப்பதற்கு.

**கதிர்.திருச்செல்வம்**

---

# தோப்பி, கோட் அணிந்து வரும் பேரினவாத ஏஜெண்டுகளை தோற்கடிக்க வேண்டும்

தொப்பி அணிந்த ஒருவரை மௌலவியாகக் காண்பித்து, முஸ்லிம்களை ஏமாற்றும் கபடத்தனங்களை அனுரகுமார திஸாநாயக்க கைவிட வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.



ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, வவுனியாவில் (03) நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், மக்கள் திரளுக்கு முன்பாக உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

சாப்பாட்டுப் பார்சல்களுக்கும் சில்லறைச் சலுகைகளுக்கும் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்கும் கூட்டத்தினரிடம் எச்சரிக்கையாக இருங்கள். நாட்டின் பொருளாதாரத்தையும் இந்தக் கள்வர் கூட்டமே களவாடியது. ராஜபக்ஷக்களிடம் இருந்த இக்கூட்டம், இப்போது ரணிலின் பாதுகாப்பில் தஞ்சமடைந்துள்ளது. இராஜாங்க அமைச்சர் ஒருவர் இவ்வளவு காலமும் எதையும் செய்யாமல், இப்போதுதான் பொழுது விடிந்ததுபோல ஓடித்திரிகிறார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு, சகல சமூகங்களையும் சமமாக நேசிக்கும் பண்பட்ட அரசியல்வாதி சஜித் பிரேமதாச. பாடசாலைகளுக்கு 'ஸ்மார்ட்' வகுப்பறைகள், பஸ்வண்டிகளை வழங்குகிறார். அனுரகுமார திஸாநாயக்க கல்வி பயின்ற பாடசாலைக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன.

சஜித் பிரேமதாசவின் வெற்றிக்கு இன்னும் சொற்பகாலங்களே உள்ளன. பஸ் வண்டிகளில் மக்களைக் கொண்டுவந்து, மாயை காட்டும் அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்ப நாட்டு மக்கள் தயார். அரசியல் வாழ்வில் எதையுமே செய்யாத அனுரகுமார திஸாநாயக்க, ஆட்சிக்கு வந்தால், எதையும் செய்யுமளவுக்கு அனுபவம் இருக்காது. இவரது ஆட்சியைக் கற்பனை செய்யவே பயமாக உள்ளது.

சீனாவிலுள்ள உர்குர் இனத்து முஸ்லிம்களுக்கு நடப்பது என்ன? பள்ளிவாசலுக்குச் செல்ல முடியாது. நோன்பு நோற்க முடியாது. புனித ஹஜ்ஜுக்குச் செல்வதற்கு அனுமதியில்லை. இந்த அபாயகரமான நிலை இங்கும் வேண்டுமா?

மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழும் மாவட்டம் வவுனியா. இங்கு மூவாயிரம் வீடுகளை அமைத்தோம். தொழிலாளர்களை நேசித்தோம். விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு உதவினோம். இவை, எவற்றையும் செய்யாமல், வாக்குக் கேட்க வந்துள்ள ஏஜெண்டுகளை விரட்டிவிடுங்கள்.

அனுரகுமாரவுக்கு தொப்பி அணிந்த மௌலவி இருப்பதைப் போலவே, ரணில் விக்ரமசிங்கவுக்கு 'கோட்' அணிந்த அலி சப்ரி இருக்கிறார். முஸ்லிம்களை ஏமாற்ற வந்த பேரினவாத ஏஜேண்டுகளே இவர்கள். எனவே இந்த தருணத்தில் நிதானமாக செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

# ஜனாதிபதித் தேர்தல் 2024



மில்லியன் கணக்கில் வாக்குகளை பெற்று வெற்றிபெற மில்லியன் கணக்கில் வாக்காளர், பார்வையாளர்களைக் கொண்ட சுபீட்சம் ஊடகத்தில் குறைந்த விலையில் விளம்பரங்களை வெளியிடுங்கள்

077 664 5232 / 077 311 2601